# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 09 | வரலாறு – I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி -I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **இலக்கம் 1-20 வரையான வினாக்களுக்கு சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. 16ஆம் நூற்றாண்டில் ஸ்பானியருக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தினை ஆரம்பித்திருந்த நாடு எது?
(1) போர்த்துக்கல் (2) ஒல்லாந்து (3) இத்தாலி (4) பிரான்ஸ்

02. கி.பி 1602 ஆம் ஆண்டு முதலாம் விமலதர்மசூரியனைச் சந்தித்த ஒல்லாந்துத் தளபதி யார்?
(1) பன் எங்கல் பெக் (2) கலன்அல்பஸ்
(3) சீ பெல் த வார்ட் (4) ஜோரிஸ் வான் ஸ்பில்பேர்ஜன்

03. கி.பி 1766ஆம் ஆண்டின் உடன்படிக்கையின்படி ஒல்லாந்தர் கண்டி மன்னனுக்கு உரித்தான பிரதேசங்களுக்கு பின்வரும் எதனை வழங்குவதைத் தடைசெய்தனர்.
(1) உப்பு (2) பாக்கு (3) கறுவா (4) யானைகள்

04. கண்டி இராச்சியம் பற்றிய தகவல்களை இரகசியமாகத் திரட்டிக் கொள்வதற்காக ஜோன்டொயிலி எனும் அரச உத்தியோகத்தரை நியமித்த ஆளுநர் யார்?
(1) பிரட்றிக் நோத் (2) தோமஸ் மெயிட்லண்ட்
(3) டொரிங்டன் (4) றொபட் பிரௌவுண்ரிக்

05. கண்டி உடன்படிக்கையின் போது “ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் ஆங்கிலேயருக்கு இந்நாட்டில் உரிமையில்லை” எனக்கூறி ஆங்கிலேயரின் கொடியை இறக்கி சிங்கக்கொடியை மீளவும் ஏற்றியவர்,
(1) வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர் (2) வலானே சித்தார்த்த தேரர்
(3) வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர் (4) மீகெட்டுவத்த குணானந்த தேரர்

06. கி.பி 1818 இல் முதலாவது சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்த இடம் எது?
(1) ஊவா – வெல்லஸ (2) தம்புள்ள (3) மாத்தளை (4) தும்பறை

07. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரரினால் நிறுவப்பட்ட பிரிவெனா எது?
(1) மாளிகாகந்த வித்தியோத பிரிவெனா (2) இரத்மலானை பரமதம்ம சேதிய பிரிவெனா
(3) பேலியகொட வித்தியலங்கார பிரிவெனா (4) புளத்கம தர்மாலங்கார பிரிவெனா

08. சரசவி சந்திரெஸ என்னும் பத்திரிகையின் மூலம் பௌத்த மக்களுக்கு அறிவூட்டிய பௌத்த மறுமலர்ச்சியாளர் யார்?
(1) அநகாரிக தர்மபால (2) ஜோன் த சில்வா
(3) ஹென்றி ஸ்டில் ஒல்கொட் (4) மீகெட்டுவத்த குணானந்த தேரர்

09. கி.பி 1509இல் இந்தியாவிலும் மற்றும் இந்து சமுத்திரத்திலும் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் பரவலடை வதில் பாரிய சேவையாற்றியவர்,
(1) லோறன்சோடி அல்மேடா (2) விலெம் பெல்க்
(3) அல்போன்ஸ் டி அல்பகூர்க் (4) பிரான்சிஸ்கோ டி அல்மேடா

10. இந்திய தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர் யார்?
(1) மகாத்மா காந்தி (2) ஹெலன் ஒக்டேவியன் ஹியூம்
(3) தாதாபாய் நவரோஜி (4) டபிள்யூ. சீ.பெனர்ஜி

11. பாலகங்காதர திலகர் தொடர்பான **தவறான** கருத்து எது?
(1) இவர் இந்தியாவின் "மேன்மையாளர்" எனும் சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தார்.
(2) இவர் டெக்கான் கல்விச் சமூகம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்.
(3) இவர் கேசரி, மருதம் எனும் இரு பத்திரிகைகளை ஆரம்பித்திருந்தார்.
(4) இவர் கி.பி 1856 இல் மகாராஷ்டிரா மாநிலத்தில் பிறந்தார்.

12. மகாத்மா காந்தி சட்டத்தரணியாக நியமனம் பெற்று பின்வரும் எந்த நாட்டில் பணியாற்றினார்?
(1) பிரித்தானியா (2) பாகிஸ்தான் (3) ஐக்கிய அமெரிக்கா (4) தென்னாபிரிக்கா

13. கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்தை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்ட தலைவர்
(1) ஜோன் த சில்வா (2) டீ.பீ.ஜயதிலக (3) அநகாரிக தர்மபால (4) பியதாஸ சிரிசேன

14 டொனமூர் அரசுக்கழகத்தில் முதலாவது சபாநாயகராக நியமனம் பெற்றவர்
(1) வில்லியம் கொபல்லாவ (2) A.F. மொலமுரே
(3) சேர்.ஜேம்ஸ் பீரிஸ் (4) H.G.C பெரேரா

15. சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் சட்டவாக்க அதிகாரம்,
(1) சனாதிபதி தலைமையிலான அமைச்சரவையிடம் காணப்பட்டது.
(2) ஆளுநர் நாயகம் தலைமையிலான அமைச்சரவையிடம் காணப்பட்டது.
(3) பிரதமர் தலைமையிலான அமைச்சரவையிடம் காணப்பட்டது.
(4) ஆளுநர் தலைமையிலான அமைச்சரவையிடம் காணப்பட்டது.

16. இலங்கையில் நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் எது?
(1) 1946ஆம் ஆண்டின் மே மாதப் பொதுத்தேர்தல்.
(2) 1947ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதப் பொதுத்தேர்தல்.
(3) 1952ஆம் ஆண்டின் மார்ச் மாதப் பொதுத்தேர்தல்
(4) 1960ஆம் ஆண்டின் மார்ச் மாதப் பொதுத்தேர்தல்.

17 இலங்கையில் உயர்ந்ததும் இறுதியானதுமான உச்ச நீதிமன்றத்தின் தலைவர்,
(1) சட்டமா அதிபர் (2) சனாதிபதி (3) பிரதம நீதியரசர் (4) சபாநாயகர்

18. கி.பி 1970ஆம் ஆண்டில் முதலாவது சந்தர்ப்பமாக மகாவலிகங்கைக்கு குறுக்காக அணைகட்டி ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் பெயர் யாது?
(1) ரந்தெனிகலத் திட்டம் (2) விக்டோரியாத் திட்டம்
(3) கொத்மலைத் திட்டம் (4) பொல்கொல்லத் திட்டம்

➢ **19 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு "அ" மற்றும் "ஆ" நிரல்களைப் பயன்படுத்தி அவற்றின் பொருத்தப்பாட்டுக்கு அமைய சரியான எழுத்தைத் தொடர்புபடுத்தி பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

19. நிரல் "அ"வில் பிரித்தானிய ஆளுநர்களும் நிரல் "ஆ" வில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகளும் தரப்பட்டுள்ளன.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| (1) ஹர்கியூலிஸ் றொபின்சன் | A அம்பாறையில் ஊறுபொக்க குளத்தினை புனரமைத்தமை |
| (2) வில்லியம் கிரகெரி | B கலாவாவி மற்றும் திஸாவாவியைப் புனரமைத்தமை |
| (3) ஹென்றி வாட் | C நீர்ப்பாசனத் திணைக்களத்தை ஆரம்பித்தமை |
| (4) வெஸ்ட் றிஜ்வே | D திஸ்ஸமகாராமைக் குளத்தினை புனரமைத்தமை |

(1) DCBA (2) DACB (3) DBAC (4) DBCA

20. நிரல் "அ"வில் பிரித்தானியர் ஆட்சியில் இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவங்களும் நிரல் "ஆ" வில் அச்சம்பவங்கள் நடைபெற்ற ஆண்டுகளும் தரப்பட்டுள்ளன.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| (1) கரையோரப் பிரதேசம் முடிக்குரிய குடியேற்ற நாடாதல் | A கி.பி 1840 |
| (2) ஆளுநர் நோர்த் கண்டியை ஆக்கிரமித்தமை | B கி.பி 1802 |
| (3) கூட்டுறவுச்சங்க இயக்கம் ஆளுநர் மக்கலத்தினால் ஆரம்பிக்கப்பட்டமை | C கி.பி 1803 |
| (4) காணிச் சட்டம் நடைமுறைக்கு வந்தமை | D கி.பி 1911 |


(1) CBAD (2) CBDA (3) BCAD (4) BCDA

(20 X 2 = 40 புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி -I

- முதலாம் வினா கட்டாயமானது.
- முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களும் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.




01. I தொடக்கம் VI வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான இடங்கள் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் A – F வரை குறித்துக் காட்டப்பட்டுள்ளன. அந்த வினாக் களுக்கு பொருத்தமான ஆங்கில எழுத்துக்களையும் அந்த எழுத்துக் குறிக்கும் இடங்களின் பெயர்களையும் உங்களது விடைத்தாளில் ஒழுங்கான முறையில் எழுதுக.

(I) கி.பி 1848இல் இடம்பெற்ற இரண்டாம் சுதந்திரப் போராட்டத்தின் மத்திய நிலையத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

(II) கி.பி 1815இல் ஆங்கிலேய ஆளுநர் ரொபட் பிரௌவுண்றிக் அவர்களால் கைப்பற்றப்பட்ட இராச்சியத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்

(III) இலங்கையில் வடகீழ் பருவக்காற்றுக் காலத்தில் அதிகளவிலான கப்பல்களை நிறுத்தி வைக்கக்கூடிய இயற்கைத் துறைமுகத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

(IV) கி.பி 1822இல் இலங்கையில் ஜோர்ஜ்பேர்ட் என்பவரால் கோப்பிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட இடத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

(V) கி.பி 1658இல் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட இக்கோட்டையுடன் போர்த்துக்கேயர் ஆட்சி இலங்கையில் முடிவுக்கு வந்தது. அதனைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்

(VI) கி.பி 1833ஆம் ஆண்டின் கோல்புறூக் சீர்திருத்தத்தின்படி மேற்கு மாகாணத்தின் நிர்வாக மையத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

(2x6= 12 புள்ளிகள்)

02 (I) ஒல்லாந்து நாட்டின் தூதுவன் ஜெனரல் ஜெராட் கல்பட் இரண்டாம் இராஜசிங்கனைச் சந்தித்த போது வழங்கிய பரிசில்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(II) ஒல்லாந்தர் ஆரம்ப காலத்தில் கோட்டைகளை நிறுவிய பிரதானமான **நான்கு** இடங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் பிரிக்கப்பட்டிருந்த **மூன்று** (முக்கிய பிரிவுகள்) கொமாண்டரிகளையும் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)

03 (I) பிரித்தானியரது கவனம் இலங்கை மீது திரும்பியமைக்கான காரணங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(II) பிரித்தானியருக்கும் கண்டி இராச்சிய மன்னர்களுக்கும் இடையே இடம்பெற்ற **இரண்டு** தூதுத் தொடர்புளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) (A) கி.பி 1797ல் கிழக்கிந்திய வர்த்தகக்கம்பனியின் ஆட்சிக்கு எதிராக கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கான காரணங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(B) கி.பி 1798-1802 காலப்பகுதியில் இலங்கையில் நிலவிய இரட்டை ஆட்சி தோல்வியுற்றமைக்கான காரணங்கள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)


kalvi.lk

04 (I) 19ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் தோற்றம் பெற்றதில் வெளிப்படையாகத் தெரிந்த பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு தலைமை தாங்கிய **இரண்டு** மறுமலர்ச்சியாளர்களைக் குறிப்பிடடு **இருவரும்** வெளியிட்ட **ஒவ்வொரு** சஞ்சிகைகளையும் முறையே எழுதுக. (4 புள்ளிகள்)

(III) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் இந்து சமய மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

(2 X 6 = 12 புள்ளிகள்)

05. (I) கி.பி 16ஆம் நூற்றாண்டில் இருந்து இந்தியாவுக்கு வருகை தந்து இந்தியாவின் கரையோரப் பிரதேசங்களில் ஆதிக்க முகாம்களை அமைத்த ஐரோப்பிய இனத்தவர்கள் **மூவரைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) இந்தியாவின் மொகாலயப் பேரரசில் ஆட்சி செய்த **நான்கு** ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) கி.பி 1857இல் இந்தியாவில் சிப்பாய்க் கலகம் ஒன்று இடம்பெற்றது.

(A) சிப்பாய் கலகம் என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? (2 புள்ளிகள்)

(B) சிப்பாய்க் கலகம் ஏற்பட்டதற்கான காரணங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

06 (I) பின்வரும் அரசியல் யாப்புச் சீர்திருத்த அம்சங்கள் எந்த அரசியல் யாப்புக்கள் மூலம் நடைமுறைக்கு வந்தன என்பதைக் குறிப்பிடுக.

A) சட்டவாக்கசபைக்கு கல்வி கற்ற இலங்கையர் ஒருவர் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்டமை.

B) சட்டவாக்கசபையில் உத்தியோக சார்புள்ளவர்களை விட உத்தியோக சார்பற்றவர்களின் எண்ணிக்கை முதன் முதலாக அதிகரித்தமை.

C) சட்டவாக்கசபையானது அரசுக்கழகம் என அழைக்கப்பட்டமை. (3 புள்ளிகள்)

(II) கோல்புறூக் - கமரன் அரசியல் சீர்திருத்தத்தின் விசேட பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) சோல்பரி அரசியல் யாப்பின் மூலம் இலங்கைக்கு கிடைத்த **மூன்று** அம்சங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

07 (I) இலங்கையில் 1972ஆம் ஆண்டுக்கு முன்னர் பதவி வகித்த **மூன்று** பிரதமர்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) 1952 − 1956 ஆண்டுக் காலப்பகுதியில் இந்த நாட்டின் அரசியலில் தெளிவாக அவதானிக்கப்பட்ட பண்புகள் **நான்கு** தருக. (4 புள்ளிகள்)

(III) சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் விவசாய வளர்ச்சிக்கும், விவசாயிகளின் முன்னேற்றத் துக்குமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)

*May*

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**